வினா—விடைகள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே முடிந்துவிட்டதனால் நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக மின்சார வெட்டினால் ஏற்பட்டுள்ள நிலைமையைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்பது குறித்து.

DR. H. V. HANDE : On a point of order......

MR. DEPUTY SPEAKER : There is no point of order now.

DR. H. V. HANDE : I request the Hon. Deputy Speaker to hear my words. During question hour......

MR. DEPUTY SPEAKER: There is no point of order at this stage. You please resume your seat.

(Dr. H. V. Hande was standing in his seat.)

MR. DEPUTY SPEAKER : I request the Hon. Member Dr. Hande to resume his seat.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, normally, the question-hour takes place for one hour and on the agenda 20 questions are put normally. But today we have put only 15 questions and at 11.00 a.m. we were expecting the Hon. Chief Minister to present the budget after the one-hour question-hour is over. But the question hour has been practically over within 20 minutes. We would like to know whether this is done with any purpose to enable the budget to be presented earlier or with any other purpose. We would like to know whether it is possible for the Hon. Chief Minister, before he takes up the budget speech, to give us an opportunity to ventilate in this House the serious situation arising outside where a huge procession is coming towards the Fort St. George.

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, will you please resume your seat ? I think you are going beyond the purview of point of order.

DR. H. V. HANDE : My mike is switched off. I am going to complete my point of order. The Deputy Speaker can exercise some patience. If there is anything out of order, you can take action later. I would request you not to scuttle my right to raise point of order. The question-hour is over within 20 minutes and we have the extra 40 minutes. The time for the budget to be presented by the Hon. Chief Minister is earmarked as 11 O'clock. During this 40 minutes we want to discuss the point of order, with regard to the serious situation arising of the procession coming to

Fort St. George, on account of electricity failure. The whole State is affected. The procession is coming to Fort St. George. I would like to know whether the Hon. Chief Minister is going to make a statement before the House. We have still 40 minutes.

MR. DEPUTY SPEAKER: You have finished your point of order. Please resume your seat.

டாக்டர் ஹாண்டே அவர்கள் தயவு செய்து உட்காரவேண்டும். 11 மணிக்குத் தான் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பது இல்லை. நேரம் குறிப்பிடப்படவில்லை. கேள்வி நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று வேண்டுமென்றே ஒன்றும் திட்டமிட்டுச் செய்யவில்லை. இந்தக் கூட்டத் தொடருக்கு வரவேண்டிய கேள்விகள் குறைவாகத் தான் இருக்கின்றன. இன்னும் சில கேள்விகளுக்கு பதில் தயாராகி வரவில்லை. ஆகவே, தயாராக இருக்கும் கேள்விகள் பதில்களை ஓரளவுக்குப் பகிர்ந்து போட்டிருக்கிறோம். மேலும், இன்றைக்கு துணைக் கேள்விகள் அதிகமாக இல்லை. அதனால் கேள்வி நேரம் சீக்கிரம் முடிந்துவிட்டது. கேள்வி நேரம் முடிந்தவுடன் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பது என்பது பேரவையில் எத்தனையோ தடவைகள் நடந்திருக்கிறது. புதியது அல்ல. திட்டமிட்டு ஒன்றும் வேண்டுமென்றே செய்யப்படவில்லை. திடீ ரென்று ஏற்பட்டதுதான். ஆகையினால் இதிலே எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை. வெளியில் ஏதோ ஒரு நிலவரம் இருக்கிறது என்றால், அதைப்பற்றி சட்ட மன்றத்தில் பேசுவதற்கு வேறு பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி இந்தச் சமயத்தில் சட்ட சபையில் விவாதிப்பது என்பது எந்த விதிக்குள் வரும் என்பது எனக்குப் புரியவில்லை.

Dr. H. V. HANDE: This is a very serious matter.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, கேள்வி நேரம் இப்பொழுது 20 நிமிட நேரத்தில் முடிந்துவிட்டது. அது சம்பந்தமாக ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது, இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பற்றி இந்த 40 நிமிட நேரத்தில் விவாதிப்பதற்கு சபைக்குப் போதுமான காலம் இருக்கிறது என்று கருதுகிறேன். இன்றைக்கு நாட்டில் ஒரு முக்கிய பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. அதாவது, மின்வெட்டுப் பிரச்னை. அதனால் பல கஷ்டங்கள், துன்பங்கள் நாட்டிலே பல இடங் களில் ஏற்பட்டிருக்கின்றன. அதே மாதிரி விலைவாசி ஏற்றம், வேலை யில்லாத் திண்டாட்டம் போன்ற பல பிரச்னைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னால் இவைப்பற்றி விவாதிப்பதற்கு இல்லை. இதைப் பற்றி யெல்லாம் பேசு வதற்கு பின்னால் எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. பட்ஜெட் டிமாண்டுகள் மீதான விவாதத்தின் போது பேசலாம். அந்தச் சமயத்தில் இதையெல்லாம் வைத்துக்கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தப் பிரச்னையைப் பற்றி இப்பொழுது விவாதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் போதிய அவகாசம் இருக்கிறது. 11 மணி வரையில் நேரம் கிடைக்கும். மின் வெட்டு சம்பந்தமாகவும், வேலையில்லாத் திண்டாட்டம் சம்பந்தமாகவும், இன்னும் வேறு பல விஷயங்கள் சம்பந்தமாகவும் அட்ஜர்ன்மெண்டு மோஷன்களுக்கு நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைத் தான் நீங்களும் சொல்லப்போகிறீர்கள்.

(திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் ஒரே பாயிண்டு ஆப் ஆர்டரைப் பற்றித் தான் சொல்லப் போகிறீர்களா ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான் பேசுவதற்கே அனுமதி இல்லை யென்றால் இந்த மன்றத்தில் இருக்க விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறேன். நான் பேசுவதைக் கேளுங்கள். எனக்குப் பேசு வதற்குக் கொஞ்சம் அனுமதி கொடுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : என்னுடைய கருத்தையும் கொஞ்சம் கேளுங்கள். என்னையும் பேசுவதற்கு அனுமதியுங்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர்..........

THIRUMATHI T. N. ANANTHANAYAKI : As per Rule 24 . .

MR. DEPUTY SPEAKER : Please resume your seat.

திரு. கே. டி. கே. தங்கமணி : இங்கே mike has a became a problem. நான் பேசுவதற்கு அனுமதியுங்கள். உதவி சபாநாயகர் என்னைப் பேச அனுமதித்திருக்கிறார். ஆனால், மைக் வொர்க் பண்ணவில்லை. இப்பொழுது வேலை செய்கிறது, நன்றி. சென்ற ஆண்டு கூட இதே மாதிரி பட்ஜட் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது தமிழ் நாடு பூராவும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். அது சம்பந்தமாக அநேகமாக எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய எல்லாத் தலைவர்களும்..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்டு ஆப் ஆர்டர் என்னவென்று தயவு செய்து சொல்லுங்கள்.

THIRU K. T. K. THANGAMANI : I would like to make a submission.

சென்ற வருஷம் இதே மாதிரி ஒரு முக்கியமான நிலைமை ஏற்பட்டு, என்னுடைய அட்ஜர்ன்மெண்டு மோஷனை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்தினேன். அந்த நிகழ்ச்சி உங்களுக்குத் தெரியும். அதே மாதிரி இன்றைக்கு பட்ஜெட் சமர்ப்பிக்கக்கூடிய நேரத்தில், உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று—இந்தச் சபையில் எழுப்ப வில்லை—உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என்ற நிலையில் அட்ஜர்ன்மெண்டு மோஷன் கொடுத்திருக்கிறேன். தமிழ் நாடு பூராவும்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்.

THIRU K. T. K. THANGAMANI : Before the Chief Minister begins..............

MR. DEPUTY SPEAKER : It is not proper. You are creating a bad precedent by discussing adjournment motion now.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் இன்னும் பேசி முடிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நான் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : "நீங்கள் உட்காருங்கள்" என்றால் என்ன அர்த்தம், நான் பாதி பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்குப் புரிகிறது ப்ரொஸீஜர்...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் பேசுவதற்கு எழுந் திருந்தால் நீங்கள் உட்கார வேண்டும். இந்தச் சபையின் மரபைக் காப் பாற்ற வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : என்னைப் பூராவும் பேச அனுமதி யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களைப் பேச அனு மதித்துக் கேட்டேன். எவ்வளவு நேரம் அனுமதிப்பது ? ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி இந்த நேரத்தில் பேசக்கூடாது...............

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் ஒரு பொறுப்புள்ள அங்கத் தினர். இப்பொழுது சபையில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன். நான் பேசிக் கொண்டிருக்கும்பொழுது நீங்கள் எழுந்திருந்தால் எப்படி ? நான் இன்னும் பேசி முடிக்கவில்லை.

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபாநாயகர் எழுந்து நிற்கும் பொழுது நீங்கள் உட்காரவேண்டும். நீங்கள் ஒரு பொறுப்புள்ள அங்கத்தினர்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் பேசி முடிப்பதற்கு நீங்கள் சந்தர்ப்பம் கொடுக்கவில்லையே ?

(திரு. ஆர். பொன்னப்ப நாடார் எழுந்தார்.)

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் சொல்லுவது பூராவும் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி இப்பொழுது நீங்கள் பேச வேண்டியதில்லை. பாயிண்டு ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் தயவு செய்து சொல்லுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்து, அந்த அறிக்கையின் மீது விவாதம் நடத்தலாம். பட்ஜெட்டை பின்னாலே எடுத்துக்கொள்ளலாம். பட்ஜெட்டை 4 மணிக்குக் கூட எடுத்துக்கொள்ளலாம். இங்கே பட்ஜெட் சமர்பிக்கப்படுவதற்கு டைம் குறிப்பிடுவதில்லை. கேள்வி நேரம் முடிந்த பிறகு பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுகிறது. பட்ஜெட் என்பது ஒரு முக்கியமான விஷயம். அதற்கு நேரம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். எல்லா மாநிலங்களிலும் பட்ஜெட் இந்த நேரத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சொல்லப் படுவது வழக்கம். பாராளுமன்றத்திலும் பட்ஜெட் அளிக்கப்படும் நேரம் குறிப்பிடுவது தான் மரபு. அப்பொழுது தான் எல்லா உறுப்பினர்களும் சபையில் இருப்பார்கள். ரூல் 22-ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மணி நேரம் கேள்வி நேரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், 11 மணிக்கு முன்னால் முடிந்துவிட்டது. பல பேர் பட்ஜெட் உரையை கேட்க வேண்டும் என்று விரும்பினால் கூட வர முடியாது. அந்த முறையில் விதியை வியாக்கியானம் பண்ணுவது சரியான முறை அல்ல. நாடாளுமன்றத்திலும் சரி, எல்லா சட்டமன்றங்களிலும் சரி, எந்த நேரத்தில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் என்று சொல்வதுதான் வழக்கம். சாதாரணமாக பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் பொழுது எந்த ஒத்திவைப்புத் தீர்மானமும் கொடுப்பதில்லை. ஆனாலும், தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய நிலைமை காரணமாக, மின்சாரப் பற்றுக்குறை காரணமாக பல நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இரண்டு விஷயங்கள் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் மின்சாரம் பற்றி தப்பான அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்..... ....The Chief Minister has misled the house என்று Privilege motion கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்ட விரோதமாகப் பேசுவதற்கு எப்படி உங்களுக்கு உரிமை இருக்கிறது ? நீங்கள் அனுபவம் உள்ள ஒரு அங்கத்தினர். உரிமை இருப்பதுபோல் கடமையும் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் சட்டவிரோதமாகப் பேசுவதாக நீங்கள் எதை வைத்துக்கொண்டு சொல்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பிரிவிலேஜ் இஷ்யூவைப் பற்றி சபையில் எழுப்பக் கூடாது. நீங்கள் என்னுடைய அறையில் கொடுத்ததைப் பற்றி அறையில் தான் விவாதிக்கலாம். அதை என் அனுமதியின்றி சபையில் எழுப்பக் கூடாது. பேரவையில் விவாதிக்கக் கூடாது. முதலில் நீங்கள் ஆரம்பித்தது பாயிண்டு ஆப் ஆர்டரில். அடுத்தது அட்ஜர்ன்மெண்டு மோஷனுக்குப் போய்விட்டீர்கள். இப்பொழுது பிரிவிலேஜ் இஷ்யூவைப் பற்றிப் பேசுகிறீர்கள். பாயிண்டு ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. தயவு செய்து உட்காருங்கள்.

1973 பிப்ரவரி 26]

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் பேசுவதைப் பூராவும் அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அனுமதிக்கவில்லை. அனுமதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். உங்களைப் பேச விட்டு அனுமதித்தாகிவிட்டது. பேசவே அனுமதிக்கவில்லை என்றால் தான் தவறு. அதற்காக எவ்வளவு நேரம் அனுமதிக்க முடியும்? நீங்கள் பேசியதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் இன்னும் பேசி முடிக்கவில்லை. அப்படியிருக்கும்பொழுது பேசக் கூடாது என்றால் என்ன அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். முதலில் நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். முற் பகல் 10-30.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் என் பேச்சை முடிக்காமல் உட்காரப்போவதில்லை. . . .

திரு. நா. வீராசாமி : சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். (திரு. கே. டி. கே. தங்கமணி நின்று கொண்டிருந்தார்) நீங்களும் உட்காருங்கள். நீங்கள் பேசுவதற்கு எவ்வளவோ நேரம் இருக்கிறது. கிட்டத்தட்ட 40 நாட்கள் இருக்கின்றன. அதனால் இப்போது உட்காருங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் என்னுடைய பேச்சை முடிக்காமல் உட்காரப் போவதில்லை என்பதை மீண்டும் மீண்டும் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். நான் சொல்ல வந்ததை முதலில் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியானால் நீங்கள் நின்றுகொண்டிருப்பதைப்பற்றிக் கவலை இல்லை. இப்போது 1973–74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவைக்கு அளிப்பார்கள்.

(திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. கே. டி. கே. தங்கமணி, டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி த. ந. அநந்தநாயகி மற்றும் சில எதிர் கட்சி உறுப்பினர்கள் தம் இருக்கையில் எழுந்து நின்றனர்.)

(4) 1973–74-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைப் பேரவை முன் வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,..............

(ஸ்தாபன காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திராக் கட்சி, காங்கிரஸ் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).